# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>ஆணை நாள் 07.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் SA 8336/விசாரணை/E/2024</u>**

திரு ஜெ.ராஜாராம் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வாடிப்பட்டி வட்டம்,
மதுரை மாவட்டம் .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

1) இவ்வாணையத்தின் 10.02.2026 நாளிட்ட ஆணையில், மனுதாரர் கோரியபடி அத்துமால் அளவை செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வாடிப்பட்டி வட்டத் துறை ஆய்வாளர் திரு கோ.ராமகிருஷ்ணன் இவ்வாணையத்தில் 07.05.2026 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், மனுதாரர் அத்துமால் கோரிய புல எண்.172/2 தொடர்பாக ஏற்கனவே எதிர் மனுதாரரால் சிவில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு (O.S.No.1764 of 2023) நிலுவையில் உள்ள நிலையில், எதிர்மனுதாரர் மீண்டும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு வழக்கை (WP (MD) No.31358 of 2024 and WP (MD) Nos.26258 & 26259 of 2024), தொடர்ந்தார் என்றும், அப்போது ஏற்கனவே சிவில் நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்றும் எனவே, நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மனுதாரர் கோரியபடி அத்துமால் அளவீடு செய்ய இயலவில்லை என்றும், இந்த விவரம் மனுதாரருக்கும் 05.05.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு, அக்கடிதத்தின் நகலும், அதை மனுதாரர் பெற்றுக்

கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலும் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலும், இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 8336/விசாரணை/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வாடிப்பட்டி வட்டம்,
மதுரை மாவட்டம்

திரு ஜெ,ராஜாராம்,
1-E, கிழக்கு தெரு, சின்ன இலந்தைக் குளம்,
மரியம்மாள் குளம் - 625 221
தனிச்சியம் வழி, வாடிப்பட்டி வட்டம்
மதுரை மாவட்டம்

Copy to File
CR/PA